**அம்பகமுவ பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பகமுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் அம்பகமுவ பிரதேச சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பொழிப்பறிக்கையில் 1.2.1 ஆம் பந்தியின் (ஆ) அவதானிப்பு தவிர என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட நிலையான வைப்புக்கள் ரூபா. 19,330 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் ரூபா. 15,820 பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. | 2024 இற்கான நிதிக்கூற்று தயாரிக்கும் பொழுது சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா. 3,000,511 பெறுமதியான தளபாடங்களும் பொருத்துகளும் மற்றும் ரூபா. 3,156,045 பெறுமதியான காரியாலய உபகரணங்களுடன் தொடர்பான பட்டியல்கள், பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் | பதிவேடுகளை எதிர்வரும் காலங்களில் சீர் செய்வதாக. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |

மெய்மையாய்வு செய்ய முடியாமல் போனது.

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பாராளுமன்றச் சட்டங்கள்** | | | |
| (i) | 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 140(1) ஆம் பிரிவு | 13 வருடங்களாக புதிய நிர்மாணங்களுக்கான வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | கட்டண அறவீடுகளை மேற்கொள்வதாக | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |
| (ii) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 03 காணிகளுடன் தொடர்பான 41 காணித் துண்டுகளுக்கான விற்பனைப் பெறுமதிக்கான அறவிடப்பட வேண்டிய 1 வீத வரி ரூபா. 427,541 அறவிடப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்வதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவை<br>நிதிப் பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் திசம்பர் 31 அன்று 2015ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா. 406,976 பெறுமதியான 13 காலம் கடந்த வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிவுறுத்தல்களுக்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,940,598 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,894,414 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| (i) | வீதவரியும் வரியும் | 5,589,000 | 3,797,102 | 3,790,773 | 1,849,334 | 5,830,000 | 3,904,609 | 3,912,126 | 1,843,006 |
| (ii) | வாடகை | 10,373,100 | 3,164,529 | 3,452,798 | 1,821,958 | 12,604,000 | 3,519,726 | 3,619,364 | 2,110,227 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,551,000 | 4,367,618 | 4,000,948 | 549,090 | 1,751,000 | 1,807,338 | 1,807,339 | 182,420 |
| (iv) | ஏனைய வருமானம் | 132,300,620 | 23,182,500 | 55,119,761 | 19,490,669 | 105,815,221 | 24,000,000 | 19,325,222 | 51,427,930 |
| | | 149,813,720 | 34,511,749 | 66,364,280 | 23,711,051 | 126,000,221 | 33,231,673 | 28,664,051 | 55,563,583 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி மற்றும் வரி | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வீதவரி மற்றும் வரி நிலுவை மீதியாக ரூபா 893,497 காணப்பட்டதுடன் இதில் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட 57 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா. 406,171 அறவிடப்பட வேண்டியிருந்தது. 30 வீதவரிக் அலகுகளிலிருந்து 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவையொன்றும், 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட 149 வீதவரிக் அலகுகளிலிருந்து ரூபா. 363,473 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்த போதும், நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் தடைக்குட்படுத்தப்பட்டு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) **வாடகை** | | |
| i. மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று முன்னைய வருடங்களுடன் தொடர்புடைய கடை வாடகை ரூபா. 467,401 அறவிடப்பட வேண்டியிருந்த துடன், 15 கடை உரிமையாளர்களிடமிருந்து 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா. 208,795 தொகையும் 04 கடை உரிமையாளர்களிடமிருந்து 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா. 245,095 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | விரைவாக அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| ii. மீளாய்வாண்டின் இறுதித் தினத்தன்று விலைமனுக் கோரப்பட்ட ஆதனங் களிலிருந்து 03 முதல் 14 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தினுள் 09 நபர்களிடமிருந்து ரூபா. 1,066,644 நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு தரப்பு வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளதாக | - முன்னைய கூற்று- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரி களிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா. 1,467,828 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா. 18,022,841 ஆகவும் இருந்தது. | நிலுவைகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | **வேறு வருமானங்கள்**<br>மீளாய்வாண்டின் இறுதித் தினத்தன்று 56 விளம்பரப் பதாதைகளுடன் தொடர்பான ரூபா. 119,865 வருமானம் பட்டியலிடப்படாதிருந்ததுடன், பட்டியலிடப்பட்டிருந்த விளம்பரப் பதாதைகள் மூலமாக மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று 22 விளம்பரப் பதாதைகளுக்காக ரூபா. 220,192 அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஜனவரி 27 திகதியிடப்பட்ட 2264/18 இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைவாக மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய 12 தொழில் முயற்சிகளுக்காக ரூபா. 27,000 பெறுமதியான அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | 04 தொழில் முயற்சிகள் மூடப்பட்டுள்ளதுடன் 01 தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சட்ட நியதிகளின் பிரகாரம் வழிநடாத்தப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 49(ஆ) மற்றும் 52 பிரிவுகளின் பிரகாரம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறப்படாது மேற்கொள்ளப்பட்ட 10 நிர்மாணங்கள் தொடர்பில் கட்டணங்களை அறவிடு வதற்கோ அல்லது சட்ட விரோத நிர்மாணங்களை அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையாளர்களுக்கு அறிவித்து அக் கட்டடங்களை சட்டபூர்வமாக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | கட்டணங்களை அறவிடுவதற்கோ அல்லது சட்ட விரோத நிர்மாணங்களை அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைச் சட்டத்தின் 49(அ) பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையொன்றின் கட்டட எல்லையினுள் மேற்கொள்ளப்படும் ஒரு நிர்மாண நடவடிக்கையின் போது குறித்த நபர் சபையுடனான நட்டஈடு இன்றி ஓப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டியிருந்த போதும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 14 கோவைகளில் எந்தவொரு தரப்பினருடனும் சபையானது குறித்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சபையின் ஊடாக நட்டஈடு இல்லாமல் ஓப்பந்தத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக. | நட்டஈடு இல்லாமல் ஓப்பந்தத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக எடுத்தல் வேண்டும். |
| (இ) | காணியின் தற்போதைய உரிமை விண்ணப்ப தாரிக்குரியதென உறுதிப் படுத்தப்படாது 14 கட்டட அனுமதிப்பத்திரங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. | பதிவு செய்யப்படும் ஒவ்வொரு கட்டிட விண்ணப்பப்படிவக் கோவைக்கும் உரிமைப்பத்திரக் குறிப்புகளை உள்ளடக்குவதாக | உரிமை உறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்து முன் கொண்டு செல்லப்படுகின்ற 27 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 1,650,225 மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களின் தகவல்களை கண்டறிந்து கொள்வதற்காக அவர்கள் இறுதியாக கடமை புரிந்த இடங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக | தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 1995 முதல் 2021 வரையான காலத்திற்கு உட்பட்ட முற்பணக் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா. 1,715,734 மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் பொழுது இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான மலக்கழிவு பவுசரின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சஸி இலக்கத்திற்கு முற்றிலும் மாற்றமான எண் என்ஜினில் காணப்பட்டமை காரணமாக முறைகேடுகள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பதிதத் தவிர்க்க முடியாமலிருந்தது. | கணினி தகவல் தொகுதிக்கு அமைவாக பரிசோதனை செய்து சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 யூலை 08ஆம் திகதியிடப்பட்ட 2235/54ஆம் இலக்க வர்த்தமானிணில் பிரசுரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாக 23(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் கூறு பிரிக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மூலம் சபையின் பொது நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த 1083 பர்சஸ் பரப்புள்ள காணியின் உரிமையினை சபை கையேற்றிருக்கவில்லை. | உரிமையினைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | காணிகளின் உரிமையினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தினை செயற்படுத்துவதற்கான பொருத்தமான ஒரு இடம் இனங்காணப்படாமை காரணமாக மஸ்கெலியா பிரதேச சபையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற ரிகாடன் கழிவு மையத்திற்கு கழிவுகள் அகற்றப்பட்டிருந்தன. இதன் காரணமாக கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டினை முறையாக மேற்கொள்வதற்கு முடியாமல் போயிருந்தது. | இனங்காணப்பட்ட காணியினை விடுவிப்பதற்கு காணி புனர் நிர்மாண ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாக. | கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டினை முறையாக மேற்கொள்ள வேண்டும். |